Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR
Case No.C.C.No. 681/2023

Deposition of witness for Prosecution P.W.1 Date : 04.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | மணிகண்டன் | Village : | அன்னூர் |
| Father's Name : | சங்கரநாராயணன் | Taluk : | அன்னூர் |
| Age : | 48 | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of July 2025 (Accused Present)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது அன்னூரில் வசித்து கட்சியில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் சாலை விபத்தினை நான் நேரில் பார்த்தேன். இவ்வழக்குச் சம்பவத்தில் இறந்து போன நபர் என் பக்கத்து வீட்டுக்காரரின் உறவினர். கடந்த 01.02.2020 ம் தேதி நேரம் சரியாக ஞாபகமில்லை, கரியாம்பாளையம் அருகே உள்ள KG மில் அருகே ஒரு இருசக்கர வாகனத்தில் சென்ற நபரும் மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்த நபரும் மோதிக் கொண்டதில் ஒரு நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்று ஞாபகம். ஆனால் மற்றொரு இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரில் உள்ள விவரங்கள் அனைத்து நான் சொன்னது தான். (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என் பக்கத்து வீட்டுக்காரர் பெயர் திருமூர்த்தி என்றால் சரிதான். இறந்து போன நபர் அவருடைய மாமா என்றால் சரிதான். நான் திருமூர்த்தி ஆகியோர் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றோமா என்றால் அது ஞாபகம் இல்லை. ஆனால் திருமூர்த்தி என்பவர் சொல்லி தான் நான் சென்றேனா என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அதை நான் பார்த்திடவில்லை என்றும் திருமூர்த்தி என்பவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர் என்னிடம் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் இறந்து போன நபருக்கு வாகன விபத்து இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒரு பொய் புகார் கொடுத்து அதனடிப்படையில் இந்த சாட்சியத்தினை அளிக்கிறேன் என்றால் தவறு.

Sd/−V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.